1972 மார்ச் 7]

Pension for Municipal employees

* 334 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether pensions have been paid to the eligible municipal employees from 14th January 1970; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) 14—1—1970 முதல் ரூ. 90-ம் அதற்கு மேலும் ஊதியம் பெறும் நகராட்சி ஊழியர்களுக்கு அரசு அண்மையில் தனி மாநில நகராட்சிப் பணியை அமைத்து உள்ளது. அரசாணைகள் 20-23, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, தேதி 5—1—1972-ல் தமிழ்நாடு நகராட்சிப் பணி, ஒழுங்குமுறை, மேல்முறையீடு, ஓய்வூதியம் பற்றிய விதிமுறைகள் வரையப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஓய்வூதிய விதிமுறைகளின்படி நகராட்சி ஊழியர்கள் ஓய்வூதிய நிதி அமைப்பது பற்றியும் இந் நிதியை இயக்க உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆராய்வாளர் (Examiner of Local Fund Accounts) பெயரில் அலுவல் பெயர் வைப்புத் தொகைக் கணக்கு Personal Deposit account வைப்பது பற்றியும் 11–2–1972 அன்று அரசு ஆணை எண் 256-ல் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்குறித்த ஆணைக்கிணங்க நகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நகராட்சி நெறியாளர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 14—1—1970-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு இப்போதாவது இந்த ஓய்வூதியத் தொகை கொடுக்க முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கது. அதே நேரத்தில் 14—1—1970-க்கு முன்னால் ஓய்வுபெற்ற இந்த நகரசபை சிப்பந்திகள் 763 பேர்கள்தான் இருப்பதாக நான் அறிகிறேன். அது இன்னும் நாளாக நாளாகக் குறையும் என்ற நிலையில், அவர்களுக்கும் இந்த வசதியைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 14—1—1970-லிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு—ரூ. 90-ம் அதற்கு மேலும் ஊதியம் பெறும் நகராட்சி ஊழியர்களுக்கு—ஓய்வூதியம் அளிக்கலாம் என்ற நோக்கம் கொண்டிருந்ததன் காரணமாக அதுவரையில் அவர்களுக் கென்று கொடுக்கப் பட்டிருக்கிற நிதியைத் திரட்டிக் கொடுக்குமாறு கேட்கப்பட்டு, அந்த முறையின் அடிப்படையில் ஓய்வூதியம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 14—1—1970-க்கு முன்னால் பிராவிடென்ட் பண்டு என்ற வகையில் நகராட்சிகள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை அவர்கள் கொடுத்து, ஊழியர்கள் அவைகளெல்லாம் பெற்றுவிட்டார்கள். இப்பொழுது ஓய்வூதியம் தரவேண்டு மென்றால் நகராட்சிகள் எந்த அளவுக்கு நிதி உதவி செய்ய முன்வருகிறார்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான் செய்ய வேண்டும். அதுபற்றி நகராட்சிகளிடமிருந்து சிலபல கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் கொடுப்பது என்பது இயலாத ஒன்றாக இருக்கும் ; வேறு வகையில் தான் திட்டமிட வேண்டியிருக்கும். அவர்களுக் கென்று ஒதுக்கப் பட்ட தொகையை அவர்கள் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். 14—1—1970-லிருந்து பெறப்படாமலே சேமித்து வைத்திருந்த காரணத்தால் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அது பற்றி அரசு பரிசீலனை செய்து விரைவில் அதுபற்றியும் முடிவு எடுக்கும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : ஓய்வூதியம் ஊராட்சி ஒன்றியங் களிலும், ஊராட்சிகளிலும் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இக் கேள்வி நகராட்சிப் பணியாளர்கள் பற்றியது. அது இப்போது மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அது தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 14—1—1970-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதாகத் தெரிவித் தார்கள். அதன் முடிவு எப்போது தெரியும் ?

1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கு நகர சபைகளின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அவர்கள் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களின் கருத்துக்கள் அரசுக்கு வந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு எடுக்க வேண்டிவரும். அவர்கள் கருத்துக்கள் எல்லாம் திரட்டப்பட்டு வருகிறது. அது வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

*** 335 வின—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, ஓய்வு ஊதியம் வழங்கும்பொழுது, பஞ்சப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 26—2—1970-ம் தேதியோ அல்லது அதன் பிறகோ நகராட்சிப் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்தைக் கணக்கிடும் பொழுது 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய பஞ்சப்படியையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று அரசு, தனது ஆணை எண் 1988 (நிலை) கல்வி, நாள் 17—11—1971-ல் உத்தரவிட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : அது நகரசபைகளில் அமுலாக்கப் பட்டு வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 17—11—1971-ல் அந்தப் பஞ்சப்படியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால் அதன் அடிப்படையில் இப்போது சம்பளம் வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

*** 336 வின—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் எழுத்தர்கள், சுகாதார உதவியாளர்கள், மருத்துவ மாதுகள், கடைநிலை ஊழியர்கள், ஆயாக்கள், இரவு காவலர்கள் இவர்களுக்கு ஓய்வு